# <u>அவசர கூட்டப்பொருள்</u>

இம்மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் பாலமோர் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கலைவாணர் கலையரங்க கட்டிடத்தினை இடித்து அப்பகுதியில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு மூலதன மானியம் / இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி (CGF/O&M Gap filling fund) 2017-2018 -ன் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் எண்.15040/2017/இ1, நாள்.13.04.2018-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது கட்டிட பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

01.03.2019 முதல் நாகர்கோவில் நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் மாமன்றத்திற்கு தகுந்தவாறு கட்டிட வடிவமைப்பில் மாறுதல் செய்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அலுவலகங்கள் அமைக்கும் விதமாக கூடுதல் தளம் மற்றும் உயர்மட்ட கூரை (High Roof) அணுகு சாலை (Bridge) மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் (infrastructure) செய்திடவும் ரூ.6.50 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் ரூ.4.00 கோடிக்கு உள்ளூர் திட்ட குழுமம் மூலம் நிதி பெற்றும் ரூ.2.50 கோடியினை சிறப்பு நிதியாக அரசு மானியம் பெற்றும் ரூ.6.50 கோடிக்கு புதிய அலுவலக கட்டிடத்திற்கு கூடுதல் பணிகள் செய்திட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> - மாநகராட்சி பொது நிதியில் போதிய நிதி இல்லாததாலும் ஒரே பணிக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யும் நிலையில் வேறு அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்படும் என்பதால் மேற்கண்டவாறு அரசுமானியம் பெற்று பணி செய்திட அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.இ1/1642/2020

**தீர்மானம் எண்.482 - அங்கீகரிக்கப்பட்டது**